
# கல்வாரியில்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# யூதாஸ் சீஷர்களின் குழாமில் காணப்பட்டான். அங்கே அவன் பொக்கிஷதாரியுமாயிருந்தான். பாருங்கள்? அவன் அவர்கள் கூடவேயிருந்தாலும், எப்பொழுதும் பணத்தின் மேல் கைபோடுகிறவனாயிருந்தான்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## **செய்தி:** 63-11-24E *மூவகை விசுவாசிகள்*

194. இப்பொழுது கவனியுங்கள். இந்த பாவனை விசுவாசி கூடவேயிருந்து பக்தி யுள்ளவனைப் போன்று நடிக்கின்றான்.

ஆனால் அவன் இருதயத்தின் ஆழத் தில், நீ எப்படி கிரியை செய்கின்றாய் என்றும், அல்லது தவறு எதுவென்றும் கண்டுபிடிக்க முயற்சிக்கிறான்.

அத்தகைய மாய்மாலக்காரர்களால் இந்த தேசம் நிறைந்திருக்கவில்லையா? அது யூதாசின் ஆவியாயிருக்கிறது. அது சரியான வார்த்தை.

யூதாஸ் சீஷர்களின் குழாமில் காணப்பட்டான். அங்கே அவன் பொக்கிஷதாரியுமாயிருந்தான். பாருங்கள்? அவன் அவர்கள் கூடவேயிருந்தாலும், எப்பொழுதும் பணத்தின் மேல் கைபோடுகிறவனாயிருந்தான்.

அவன் பண ஆசை பிடித்தவனாயிருந்தான் என்று சரியாகச் சொல்லலாம்.

அவன் விசுவாசியைப் போன்று நடித்தாலும், பாவனை விசுவாசியாயிருந்தான்.

195. ஆனால் ஒன்றை ஞாபகம் கொள்ளுங்கள். அவனால் இயேசுவை முட்டாளாக்க முடியவில்லை.

அந்த எழுபது சீஷர்கள் இயேசுவை விட்டுச் சென்ற பின்னர், விசுவாசிகளான சீஷர்கள் மட்டும் அவரோடு தரித்து நின்றனர்.

ஆனால் இயேசு பன்னிருவராகிய அவர்களிடம் திரும்பி, பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ள வில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசா யிருக்கிறான் என்றார்'' (யோவா. 6:70), யூதாஸைக் குறித்து இயேசு ஆதிமுதலாய் அறிந்திருந்தார். ஏனெனில் அவர் வார்த்தையாயிருந்து இருதயத்தின் இரகசியங்களை அறிந்தவராயிருந்தார்.


196. இது எவ்வளவு கடினமான காரியம்! ஒரு நிமிடம் ஆழமாய் சிந்தித்துப் பாருங்கள். “சகோதரனே'' என்று அழைத்து

தம்முடன் கூட நடந்து கொண்டிருக்கிற ஒருவன் ஆதி முதலாய் ஏமாற்றுக்காரன் என்றும் முப்பது வெள்ளிக் காசுக்காக தம்மைக் காட்டிக் கொடுக்கப் போகிறான் என்று, அறிந்திருந்தும், அந்த உணர்வு களை தம் மடியில் சுமந்திருந்தாரே அது எவ்வளவு கடினமான காரியம் "சிநேகிதனே" என்று இயேசு யூதாஸை அழைத்தார். தம்மை அவன் காட்டிக் கொடுக்கப் போகிறான் என்பதை அவர் முன்பே அறிந்திருந்தார்.





# தான் கிறிஸ்துவை மறுதலித்ததை அறிந்தவனாக மிகவும் அதைரியப்பட்டவனாக அவன் அங்கு மீன் பிடித்துக் கொண்டிருந்தான்



சகோ.வில்லியம் பிரன்ஹாம்
அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 61-11-19 பரிபூரண பலவீனத்தினால் விளங்கும் பரிபூரண பலம்

327. பேதுரு அங்கு மீன் பிடித்துக் கொண்டிருந்தான்... அவனுடைய தொழில் அதுவாயிருந்தது. அவனுடைய தொழிலை நான் விரும்புகிறேன். தான் கிறிஸ்துவை மறுதலித்ததை அறிந்தவனாக மிகவும் அதைரியப்பட்டவனாக அவன் அங்கு மீன் பிடித்துக் கொண்டிருந்தான். ஓ! அப்பொழுது அங்கு அந்த தீர்க்கதரிசி நின்று கொண்டு, "பேதுருவே நீ என்னை நேசிக்கிறாயா" என்றார்.

328. அதற்கு அவன், "ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர்

அறிவீர், உமக்காக மரிக்கவும் ஆயத்தமாயிருக்கிறேன்" என்றான்.

329. அதற்கு அவர், "இந்த இராத்திரியிலே, சேவல் கூவுவதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய்" என்றார் (மத்.26:34)

330. அவன் அங்கு நின்று கொண்டு, அந்த மனுஷனை நான் அறியேன், அந்த பெந்தெகோஸ்தேயினரைக் குறித்து ஒன்றும் எனக்குத் தெரியாது" என்றான். அது நிறைவேறுவதை அவன் கண்டான்.

331. இப்பொழுது பிரசங்கத்தை முடிக்கும் நேரமல்ல, என் கடிகாரம் பெற்றுக் கொண்ட ஒரு மயக்கமாயிருக்கிறது. நான் பிரசங்கத்தை முடிக்க வேண்டியவனாக இருக்கிறேன். ஆனால் இப்பொழுது அதை

முடிக்கிறதாயில்லை. ஏனெனில் இக்காரி யத்தை நான் பேசி முடிக்க வேண்டும்.

332. நான் அவரை மறுதலித்தேன். பிலாத்துவின் சமூகத்தில் அவரை நான் மறுதலித்தேன். அந்த சிறிய பெண் என்னிடத்தில் வந்து, "நீயும் இயேசுவோடு கூட இருந்தாயல்லவா" (மத். 26:7) என்ற பொழுது நான் அவரை சபித்தேன்! ஓ, அவன் மிகவும் பயங்கரமான நிலைமை யிலிருந்தான். அவன் மறுதலிக்கும்போது. இயேசு திரும்பி அவனைப் பார்த்ததை அவன் கண்டிருந்தான். (லூக். 22:61) அவன் மிகவும் அதைரியப்பட்டவனாக வெளியே சென்று தனக்குள்ளாக, "இனி மேலும் நான் எதற்காக ஜீவிக்க வேண்டும்? என்று பேசிக் கொண்டான்.

333. அது மட்டுமன்றி அவன் “நான் திரும்பவும் மீன் பிடிக்க சென்றுவிடவா? ஏனெனில் இனிமேல் என்னால் பிரசங்கிக்க இயலாது. ஆகவே திரும்பிச் சென்று மீன் பிடிக்க ஆரம்பிக்கலாம் - என்றா யோசித் தான். ஆகவே தன்னுடைய வலையை கடலில் போட்டு இரவு முழுவதும் மீன் பிடிக்கச் சென்றான். ஆனால் ஒரு மீனையும் பிடிக்கவில்லை. அவன் அங்கு பலவீனமான பகுதிக்கு வந்து அதைரியப் பட்டு தன் திறமையின் முடிவிற்கு வந்து விட்டான்.

334. பிரதான ஆசாரியனுடைய மகனுடைய காதுகளை வெட்டுமளவிற்கு அவன் தன்னை மகத்தானவன் என்று நினைத்திருந்தான். தான் ஏதோ கற்றது போல் தன்னை யோசித்துக் கொண்டிருந் தான். ஆனால், அவன் ஏதும் கற்கவில்லை.

அவைகள் எல்லாவற்றையும் அவன் மறக்க வேண்டியதாயிற்று.

335. அவன் அங்கே நின்றுக் கொண்டு, “நல்லது எனக்கு ஒன்று தெரியும், அது மீன் பிடிப்பது. ஆகவே மீன் பிடித்து என் வாழ்க்கையை நடத்த முடியும்” என்று நினைத்தவனாக தன் வலையை போட் டான். ஆனால் முழு இரவும் ஒன்றையும் பிடிக்கவில்லை. என்னே ஓர் ஏமாற்றம்! ஒவ்வொரு தடவையும் அவன் இழுத்த போதெல்லாம் காலியான வலை. மிகவும் ஏமாற்றம் அடைந்தான். தன்னுடைய மிக பலீவன பகுதிக்கு அவன் வந்து, “இந்த படகினின்று குதித்து விடவேண்டும் போல் எண்ணம் எனக்கு உண்டாகிறது. நான் எதற்கும் தகுதியற்றவன், எந்த விதத்திலும்” என்று யோசித்தான். அந்நேரத்தில், “பிள்

ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்க ளிடத்தில் உண்டா” என்ற சத்தம் உண் டானது. (யேவா .21:5)

336. பேதுரு கரையை நோக்கிப் பார்த்தான், அங்கே ஒரு மனிதர் நின்றுக் கொண்டிருந்தார். பேதுரு. இரவெல்லாம் நாங்கள் கஷ்டப்பட்டும் ஒன்றும் அகப்பட வில்லை, நான் ஒரு மீன்பிடிப்பவன் என்று என்னை நினைத்துக் கொண்டிருந்தேன்” என்றான்.

337. “ஆம். இரவெல்லாம் கஷ்டப்பட் டேன். ஒன்றையும் பிடிக்கவில்லை. ஓ இந்த பகுதியில் மீன்கள் இல்லை போலி ருக்கிறது” என்றான்.

அதற்கு அவர் “நீங்கள் படவுக்கு வலது புறமாக வலையைப் போடுங்கள்” என்றார்.

338. “நாங்கள் அதை ஏற்கனவே செய்து விட்டோம்... என்ன? வலது பக்கமா? அதை நாங்கள் செய்தோமே!

“வலது பக்கமாக வலையைப் போடுங் கள்”

339. அவன் அவ்விதமாக செய்து வலையை இழுத்தான். அப்பொழுது அவன் பலமுள்ளவனானான். ஓ. அவன் தன்னுடைய பழைய மீன்பிடிக்கும் ஆடையை எடுத்து கட்டிக் கொண்டு, “சகோதரரே. அவர்தான் அது! என்று கூறியவாறு மற்றவர்களைக் காட்டிலும் துரிதமாக நீந்தி கரைக்கு வந்தான். மற்றவர்களோ தண்டு வலித்து எவ்வளவு வேகமாக வரமுடியுமோ அவ்வளவு வேக மாக கரை வந்து சேர்ந்தார்கள். அவன்

பலமுள்ளவனாயிருந்த போது அவனால் ஒன்றும் செய்ய இயலவில்லை. ஆனால் அவன் பலவீனமானபோது அப்பொழுது தான் அவன் பலமுள்ளவனானான், ஆம் ஐயா.


340. ஓ, வெறுமையான பாத்திரங்களை எடுத்து அவர்களைக் கொண்டு இந்த உலகத்தை அசைப்பது தான் தேவனுடைய வழியாயிருக்கிறது. (இன்னும் கொஞ்சம் பேசி பின்பு நாம் முடித்து விடலாம்). பெந்தெகோஸ்தே நாளன்று அவர் என்ன செய்தார்? அவர்கள் தங்களை வெறுமை யாக்குவதற்கு 10 நாட்கள் பிடித்தன. ஆனால் அவர்கள் அங்கு தங்களுடைய பாத்திரங்களை திருப்பி வைத்துக் கொண்டு காத்திருந்தார்கள். அப்பொழுது தேவன்

அவர்களை நிரப்பினார். அவ்வளவுதான்! அவர்கள் உலகத்தைக் கலக்கினார்கள்.

341. இன்றுள்ள தேவை அதுதான் நம்மை வெறுமையாக்குவதே நமக்குத் தேவையாயிருக்கிறது. அப்பொழுது தான் தேவன் நம்மை நிரப்ப முடியும். இங்கு அநேக காரியங்களை நான் பேசாமல் விட வேண்டியதாயிருக்கிறது. நாம் ஏற்கனவே நிரம்பியிருக்கிறோம் என்றால் அத்தகை யோரை தேவன் நிரப்ப முடியாது. வேத சாஸ்திர பயிற்சியினால் நீங்கள் நிறைந் திருப்பீர்களென்றால் தேவன் உங்களை உபயோகிக்க முடியாது. தேவன் நிரப்பத் தகதாக அவருக்கு வெறும் பாத்திரங்களே தேவையாயிருக்கிறது.



ஆகவே அப்பொழுது அவர் புறாவின்
முகத்தை நோக்கிப்பார்த்து,
"என்னுடைய சித்தம் அல்ல,
உம்முடைய சித்தமே ஆகக்கடவது"
என்றார்



## சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

---

# செய்தி: 59-12-20M தேவனோடு சேர்ந்துரையாடல்

---

45. இன்னும் வேறொரு, அல்லது இரண்டு சேர்ந்துரையாடல்களை நான் அழைக்கட்டும். இதை நான் அழைப்பேனாக. அங்கே ஒரு சமயத்தில்... முப்பத்து மூன்றரை வருட பரிபூரண ஜீவியம் செய்த ஒரு ஜீவியம். நான் வாழ விரும்புகின்ற, நீங்கள் வாழ விரும்புகின்ற ஒரு மனிதனாக அவர் இருந்தார். அவர் தாம் நேசித்த சகோதரருக்காக, தாம் நேசித்த ஜனங்களுக்காக, அவர் காண விரும்பிய சூரிய அஸ்தமான நாட்களுக்காக இவ்விதமாக

ஏதோ ஒன்றுக்காக அவர் வாழ வேண்டியிருந்த ஒரு மனிதனாக இருந்தார். நினைவில் கொள்ளுங்கள், இயேசு ஒரு மனிதன் ஆவார். தேவன் அவருக்குள் இருந்தார்.

ஒரு சமயம் வந்தது.... (ஒலிநாடாவில் காலியிடம் - ஆசி)...

அந்த ஆட்டுக் குட்டியை வழி நடத்தின அந்த ஆவியானவர், அந்த புறா. ஆட்டுக் குட்டிக்கும் புறாவிற்கும் ஒரு சேர்ந்துரையாடல் வைக்கப்பட வேண்டியதாயிருந்தது. அதை முடிவு செய்வதற்காக அவர்கள் ஒரு இடத்தை அமைத்தனர். அந்த இராப்போஜனத்திற்குப் பிறகு, அந்த சிறிய கேரீத் நீரூற்றை அல்லது எங்கேயோ அவர்கள் கடந்து சென்றனர். ஆகவே நீரூற்றைக் கடந்து கெத்சமெனே என்றழைக்

கப்பட்ட தோட்டத்திற்குள் அவர்கள் சென்றனர். அவர்கள் ஒரு சேர்ந்துரையாடலைக் கைக்கொள்ள வேண்டியதாய் இருந்தது. தேவனும் கிறிஸ்துவும் அதை கலந்தாலோசிக்க வேண்டியதாய் இருந்தது. ஆட்டுக்குட்டியும் புறாவும் ஒன்றாக உட்கார வேண்டியதாய் இருந்தது. புறா ஆட்டுக்குட்டியிடம் பேச வேண்டியதாய் இருந்தது, அது ஆட்டுக்குட்டியின் மரணமாக இருந்தது. இப்பொழுது, அவர்கள் அந்த பாறைக்கு அருகில் அமர்ந்த பொழுது, இந்த சேர்ந்துரையாடலைக் கேட்கும்படியாக பரலோகத்தின் எல்லா தூதர்களும் கீழே இறங்கி வருகின்றனர். ஓ! அங்கே காபிரியேல், மிகாவேல், எட்டி இன்னும் ஆயிரமாயிரம் தூதர்கள் அங்கே அந்த பாறையைச் சுற்றி அமர்ந்திருந்தனர்.

46. ஒருவேளை இந்த காலை வேளை யில் களைத்துப் போயிருக்கின்ற உங்க ளைப் போலவே அவர்கள் பெரிய கூட் டங்களை அதிக அளவில் நடத்தி களைத்துப் போயிருந்த அவருடைய சீஷ ரிடத்தில், அவர் "நீங்கள் என்னுடன் சேர்ந்து ஒரு மணி நேரம் விழித்திருக்கி றீர்களா? ஏனெனில் நான் ஒரு சேர்ந் துரையாடலிற்கு போகின்றேன். நான் தனியாக செல்ல வேண்டும்" என்றார். ஆகவே என்னே அப்பொழுது அவர்கள்... அந்த சேர்ந்துரையாடல் அமைக்கப்பட் டது. ஆகவே அந்த இளமையான, ஆட்டுக்குட்டி அதன் அழகான ஜீவியம், அதைப்போன்ற ஜீவியம் ஒருபோதும் இருந்ததே இல்லை. அந்த ஆட்டுக்குட்டி யானவரின் ஜீவியத்தைப் போல இருந்ததே இல்லை, இருக்கப் போவதும் இல்லை.

ஆகவே இப்பொழுது பிதா "உனக்கு விருப்பமாயிருக்கிறதா? உன் சகோதரரர் மேல் உனக்கு இருக்கும் அன்பு பெரியதா? இந்த பாவம் நிறைந்த, நீ பிறந்த இந்த நாற்றமெடுக்கும் உலகிற்காக நீ கொண் டிருக்கும் அன்பு, உன்னுடைய ஜீவனை இழக்கின்ற அளவிற்கு நீ அதை நேசிக் கின்றாயா? அவர்களுடைய இடத்தை எடுத்து, அவர்களுடைய பாவங்களை சுமந்து, கடுமையான, கொடுமையான மர ணத்தை சந்திக்கின்ற அளவிற்கு நீ அவர் களை நேசிக்கிறாயா?'' என்றார். நீங்கள்.... அவ்வித மரணத்தை அடைய அவரே யன்றி வேறொன்றும் இருக்க முடியாது. ஆகவே அந்த சேர்ந்துரையாடலில் அவ ருடைய புருவத்திலிருந்து இரத்தம் சொட்ட ஆரம்பித்தது, ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அவர் அதிக பிரயாசை உடையவராய்

இருந்தார். உலகத்தின் பாவங்கள் எல்லாம் அவர் மீது இருந்தது. ஆகவே அப்பொழுது அவர் புறாவின் முகத்தை நோக்கிப்பார்த்து, ''என்னுடைய சித்தம் அல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது'' என்றார்.

ஓ, இக்காலை நம்முடைய இருதயங்களில் அப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தை உடையவர்களாக நாம் இருப்போமா? உன்னுடைய நாற்றமெடுக்கும் அந்த சிறிய ஜீவியத்தை உன்னால் உதறித்தள்ள முடியுமா? அவருடைய முகத்தை நோக்கிப் பார்த்து ''என்னுடைய சித்தம் அல்ல என்று நீ கூற விரும்புகிறாயா?'' நான் ஒரு குடிகாரன், ஆனால் இனிமேல், நான் குடிக்க மாட்டேன். நான் ஒரு சூதாட்டக்காரன்; நான் இனி குடிக்க மாட்டேன். நான்

ஒழுக்கங்கெட்டவன், ஆனால் இனி அவ் விதம் நான் இருக்க மாட்டேன். நான் பொய் சொல்பவன், ஆனால் இன்றி லிருந்து நான் நிறுத்தி விடுகிறேன். நான் ஒரு மோசமான ஆள். ஆனால் இந்த சேர்ந்துரையாடலில், இக்காலை வேளை யில் நான் உம்முடைய முகத்தை நோக்கிப் பார்ப்பேன், எனக்காக மரித்து எனக்கு பாதையை சரியாக உண்டு பண்ணின என் எஜமானனைப் போன்று, என்னுடைய வீடே போனாலும் சரி, ''என்னுடைய சித்தம் அல்ல, உம்முடைய சித்தம்'' என்பேன். அது என்னுடைய புருஷ னையோ, என்னுடைய மனைவியையோ, என்னுடைய தந்தையையோ, என்னுடைய தாயையோ, என்னுடைய ஐக்கியத் தையோ, என்னுடைய சபை உறுப்பினர் காரியத்தையோ, எதையுமே இழக்கச்

செய்தாலும் பரவாயில்லை. இந்த சேர்ந் துரையாடலில், இக்காலையில், உம்மு டைய பரிசுத்த ஆவி எனக்குள் வாசம் செய்ய வேண்டும் என்று நான் கூறுவேன். அதைக்குறித்து நான் கேட்டிருக்கின்றேன். நீர் எனக்குள் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். என்னுடையதல்ல, ஆனால் உம்முடையது. அதுதான் என் னுடைய தீர்மானம் தேவன் அந்த இடத் திற்கு அழைத்திருக்கிறார், ஏதோ ஒரு உயரமான இடமோ, உப்பரிகையோ அல்ல, ஆனால் உள்ளே வரும்படியான விழுந்து போகும் நிலையிலுள்ள ஒரு தாழ்மையான சிறிய கூடாரமாகும். நாம் ஒரு சேர்ந்துரையாடலைக் கொண்டிருக்கின் றோம்.



# அன்று முதல் அவனால் கொட்ட முடியவில்லை



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 60-05-18 புத்திரசுவிகாரம் #2

86. மரணத்திற்கு ஒரு கூர் இருந்தது. அதைக் கொண்டு அது மனிதர்களைக் கொட்டி வந்தது. பிசாசு, "ஆ, நீ எனக்கு செவி கொடுத்ததினால் உன்னைப் பிடித்துக் கொண்டேன். உன்னைக் கொட்டி கல்லறை யில் வைத்துவிடுவேன். அந்த ஆட்டின் இரத்தத்தினால் எவ்வித உபயோகமு மில்லை. அது ஒரு மிருகத்தின் இரத்தம் மாத்திரமே'' என்று கூறி வந்தான். ஆனால் தேவனோ தமது ஞானத்தினால், உலகத் தோற்றத்துக்கு முன்பு அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் ஒருவர் தோன்று வார் என்று அறிந்திருந்தார். ஆம், ஐயா.

அந்த காலம் நிறைவேறுமளவும் அவர் காத்திருந்தார்.

87. ஒரு நாள் ஆட்டுக்குட்டியானவராகிய இந்த மனிதன் தோன்றின போது, சாத்தான் கூட ஏமாந்து போனான் அவரை அவன் உற்று நோக்கி, “நீர் தேவனுடைய குமாரனேயானால், இன்னின்னதைச் செய்யும். நீர் தேவனுடைய குமாரனேயானால், ஒரு அற்புதத்தை செய்யும். நீர் செய்வதை நான் காணட்டும். ஊ, ஊ, ஒரு கந்தைத் துணியை உமது முகத்தில் கட்டி உம்மைக் குட்டுவோம் நீர் தீர்க்கதரிசியானால் உம்மை அடித்தது யாரென்று சொல்லும். நீர்தான் அவரென்று எனக்கு நம்பிக்கையில்லை. அது உண்மையானால் நேரடியாக எங்களிடம் கூறிவிடும் என்று இப்படி

யெல்லாம் அவன் பேசினான். ''ஓ, நீர் யாரென்று எங்களுக்குத் தெரியப்படுத் தும்'', அவரோ தமது வாயைத்திறவாம லிருந்தார்.

88. அவர் தமது சீஷர்களிடம், ''என் பிதாவினிடம் நான் வேண்டிக் கொள் வேன். அப்பொழுது பன்னிரண்டு லேகி யோன்களுக்கும் அதிகமான தூதர்களை அவர் அனுப்புவார்'' என்றார். பிலாத்து அதை கேட்கவில்லை, உங்களுக்கு தெரி யுமா?

89. "தேவன் அந்த விண்ணப்பத்திற்கு செவி கொடுக்கவில்லை, பார்த்தீர்களா? அவர் தேவனுடைய குமாரனாயிருந்தால், அதற்கு செவிகொடுத்திருப்பாரே! ஆகவே, அது அவரல்ல அவருடைய சரீரத்தி

லிருந்து இரத்தம் ஒழுகுவதைப் பாருங்கள். ஏய், போர் வீரர்களாகிய உங்களில் சிலர் அவருடைய முகத்தில் துப்புங்கள்''. அவர் மேல் துப்பி, அவரை பரியாசம் செய்து, அவருடைய தாடியைப் பியத்தார்கள். ”ஓ, அல்ல, அவரல்ல. என் கொடுக்கை உம்மில் பதியப் பண்ணுவேன். அவரை அங்கு கொன்று போடுவேன். நீர் அகப்பட்டுக் கொண்டீர்.''


90. அவர், ''ஏலி, ஏலி! என் தேவனே!, என் தேவனே!'' என்று கூக்குரலிட்ட போது, அவர் ஒரு மனிதன். ஏன் என்னைக் கைவிட்டீர்?“

91. கெத்சமனே தோட்டத்தில் அபி ஷேகம் அவரை விட்டு சென்றது என்று உங்களுக்குத் தெரியுமா? அவர் ஒரு

பாவியாக மரிக்க வேண்டியதாயிருந்தது. அவர் பாவியாக மரித்தாரென்று உங்க ளுக்குத் தெரியுமா? அவருடைய பாவங்க ளாலல்ல, உன்னுடைய பாவங்களையும் என்னுடைய பாவங்களையும் அவர் சுமந்ததனால். அங்கு தான் அந்த அன்பு பிரதிபலித்தது - அவர் எவ்வாறு என் பாவத்தை ஏற்றுக் கொண்டு சுமந்தார் என்பதில் ஓ, அல்லேலூயா! அவர் என் பாவங்களை ஏற்றுக் கொண்டு சுமந்தார்.

92. அங்கே அவர் வாயைத் திறக்க வில்லை. "ஓ, இவன் ஒரு சாதாரண மனிதன். இவன் கன்னியின் மூலம் பிறக்க வில்லை. நான் என் கொடுக்கை அதனுள் பதியச் செய்துவிட்டேன்."

93. அவன் அங்கு வந்து, தன் கொடுக்கை அவருக்குள் பதித்தான். ஆனால் அது தவறான நேரம், அன்றே அவனுடைய கொடுக்கை அவன் பறி கொடுத்துவிட்டான். அன்று முதல் அவ னால் கொட்ட முடியவில்லை. அவ னுடைய கொடுக்கை அவன் அங்கே விட்டுவிட்டான். அவர் மூன்றாம் நாளில் உயிரோடெழுந்தார். ''மரித்தேன், ஆனா லும், இதோ, சதா காலங்களிலும் உயி ரோடிருக்கிறேன்'' (வெளி. 1:18). ஆம், ஐயா! அவர் யாரென்பதை பிசாசு காணத் தவறினான். ''நான் பிழைக்கிற படியினால் நீங்களும் பிழைப்பீர்கள்'' (யோவான். 14:19).

# அதை அப்படியே கைகழுவிவிடலாம் என்று நினைக்காதே. கிறிஸ்து உன் கரத்தில் இருக்கிறார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 57-04-19 பரிபூரணம்

நாம் அமைதியாய் காத்துக் கொண் டிருக்கும் நேரத்தில், எல்லோரும் உங்கள் தலையை ஜெபத்திலே தாழ்த்தி மெல்ல மாக இந்த பாடலை பாடுங்கள்.

*இம்மானுவேலின் நரம்பிலிருந்து எடுக் கப்பட்ட,*

*இரத்தத்தினால் உண்டான ஊற்று ஒன்று உண்டு,*

*அவருடைய இரத்தத்திற்குள் மூழ்கின பாவிகளுடைய,*

*குற்ற கறைகள் யாவும் நீங்கிற்று...*

நீ இப்பொழுது இன்னொரு விசையாக அதைக் குறித்து சிந்தித்து பார்க்க மாட் டாயா? அதை அப்படியே கைகழுவி விடலாம் என்று நினைக்காதே. கிறிஸ்து உன் கரத்தில் இருக்கிறார்.

பிலாத்து இவ்விதமான காலை வேளையிலே, ஆறு மணியளவில் அதைச் செய்தான். ஆனால் அவனுடைய கரங்கள் இன்னும் இரத்தமாகவே (அந்த குற்றத் திற்குக் குற்றவாளியாகவே இருக்கிறார்) இருக்கிறது. அவனுக்கு என்ன நேர்ந்தது என்று உங்களுக்கு தெரியுமா. அநேக ஆண்டுகளுக்குப் பிறகு அவன் சுவிட் சர்லாந்து சென்று தன்னுடைய சிந்தையை இழந்து, ஒரு தண்ணீர் குளத்திலே மூழ்கி மரித்துப் போனான். இன்று காலையிலே, சுவிட்சர்லாந்திலே, அந்த குளத்தின் அடி

தளத்திலிருந்து பெரிய ஓட்டை வழியாக நீல நிறத் தண்ணீர் கொப்பளித்துக் கொண்டு மேலே எழும்புகிற காட்சியை பார்க்கும்படி நூற்றுக்கணக்கான மக்கள் வருகிறார்கள். ஒவ்வொரு வருடமும் அப்படி செய்கிறார்கள். அதற்கு பின்னாக இருக்கும் பழமொழி என்னவென்றால், தேவன் அவன் கரங்களை சுத்தம் செய்ய தண்ணீர் தர மறுத்துவிட்டார் என்பதாக கூறப்படுகின்றது.


50. சகோதரனே, நீ எத்தனை முறை ஞானஸ்நானம் எடுத்திருந்தாலும் சரி, அல்லது வேறு எந்த காரியத்தைச் செய்ய முயற்சித்திருந்தாலும் சரி, கிறிஸ்துவின் இரத்தத்தைத் தவிர வேறு எதுவுமே உன்னுடைய கரங்களை சுத்தம் செய்ய முடியாது. தேவன் அதை மறுத்துவிட்டார்.

அந்த நீலநிறத் தண்ணீர் ஏறத்தாழ இரண் டாயிரம் ஆண்டுகள் ஆன பிறகும் இன் னும் கொப்பளித்துக் கொண்டே இருக் கிறது. தேவன் அதை மறுத்துவிட்டார். உன் னுடைய சுய நீதி உன்னுடைய பாவத்தை சுத்திகரிக்க முடியாது. இயேசுவின் இரத் தத்தைத் தவிர வேறு எதுவும் சுத்திகரிக் காது, அதைக் குறித்து இப்பொழுது சிந்தித்துப் பாருங்கள். நாம் சற்று நேரத்தில் ஜெபிக்கப்போகிறோம்.

நான், இன்றிரவிலே, ஒன்றைக் கேட்க முடியுமா என்று வியக்கிறேன். அவர் அன்று பிலாத்துவின் நியாயத்தீர்ப்பின் கூட்டத்திலே இவ்விதமான காலை வேளை யிலே நின்ற போது, "என்னுடைய இராஜ் ஜியம் இந்த உலகத்தினுடையதாயிருந் தால், நான் என்னுடைய பிதாவினிடத்தில்

பேசினவுடனே அவர் உடனடியாக பண்ணிரெண்டு லேகியோன் தூதர்களை எனக்காக அனுப்புவார்“, என்றார். அதில் அவர்களில் ஒருவர் போதும் இந்த உலகத்தை அழிக்க “நான் அவரிடத்தில் பேசினவுடனே, எல்லாமும் நிவிர்த்தி யாகும்படி உடனடியாக பண்ணிரெண்டு லேகியோன் தூதர்கள் என்னுடைய கட்ட ளைக்கு கீழ் இருந்திருப்பார்கள். அதை அவரால் செய்திருக்க முடியும்”, என்றார். ஆனால் அவரோ உன்னுடைய மரணத் தையும் பாவத்தையும் ஏற்றுக்கொள்வதற் காக மிகத் தாழ்மையோடும் பணிவோடும் நின்றார்.

# ஒரே ஒரு தேவதூதனால் என்ன செய்ய முடியும்? ஒரு நொடிப்பொழுதில் அவன் இந்த பூமியை அழித்துப் போடுவான்



## செய்தி: 60-10-02 இனத்தான் மீட்பர்

183. இயேசு என்ன செய்தார்? அவரும் பகிரங்க அறிக்கை செய்தார். சாத்தான் பாவியாக இருந்தபடியால் பாவத்துக்காக மரிக்க முடியவில்லை. அவன் பாவத்துக்கு பிதா.

ஆனால் இயேசு, குற்றமற்றவர், பரலோகத்தின் தேவன், மரிக்க அவசியமில்லாதவர், கீழே இறங்கி வந்து, வானத்துக்கும் பூமிக்கும் நடுவே உயர்த்தப்பட்டு மரித்து, தமது மரணத்தின் மூலம் பகிரங்க அறிக்கை செய்தார். பகிரங்க அறிக்கை!

அவருடைய வஸ்திரங்களை அவர்கள் களைந்து, அவரை அவமானப்படுத்தினார்கள்.

அவர் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கினார்.

நம்மை மீட்பதற்கென, அவர் பாவமுள்ள, அவமானமுள்ள மரணம் எய்த வேண்டியிருந்தது. பகிரங்க அறிக்கை! ஆமென்.

184. அவர் என்ன செய்தார்? தம்முடைய சொந்த நீதியைக் உதைத்துப் போட்டு, தம்முடைய சொந்த மகிமையை உதைத்து தள்ளி…

“எனக்கு அதிகாரம் உண்டு. நான் பிதாவை வேண்டிக் கொண்டால் அவர்

எனக்கு பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை அனுப்புவார்.” அவர் கள் போக்கையே மாற்றியிருப்பார்கள். ஒரே ஒரு தூதன் அதைச் செய்திருக்க முடியும்.

அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதர்களை வரவழைத்திருக்க முடியும். அது 40,000 தேவதூதர்கள்.

அவர்கள் என்ன செய்திருப்பார்கள்? அவர், “நான் பிதாவை வேண்டிக் கொண் டால் அவர் உடனே... (அது இப் பொழுதே!)... எனக்கு பன்னிரண்டு லேகி யோனுக்கு அதிகமான தூதர்களை அனுப்பு வார். அவர்கள் இங்கு வந்து கவனித்துக் கொள்வார்கள்.”

ஒரே ஒரு தேவதூதனால் என்ன செய்ய முடியும்? ஒரு நொடிப்பொழுதில் அவன் இந்த பூமியை அழித்துப் போடுவான்.


அப்படியானால், பாருங்கள், ஆயிரக் கணக்கான தேவதூதர்கள் அவரிடம் வந் திருக்க முடியும். பாருங்கள்?

ஆனால் அவர் அதை உதறித் தள்ளி னார்.

அவர் அதை ஒருபுறம் வைத்துவிட் டார்.

அவர் தமது மதிப்பு அனைத்தும் ஒரு புறம் தள்ளி வைத்து, உங்களுக்காகவும் எனக்காகவும் பாவியானார்.

# அந்தக் கேடடைந்தவராய், எந்தத் தவறும் செய்யாத நிலையில் ரோம அரசின் மிகக் கொடூரமான தண்டனையை பெற்றவராய் அவர் மரித்துக் கொண்டிருந்தார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-12-30M முற்றிலுமானவர்

*130. கிறிஸ்துவின் மரணமே எல்லாப் பிரச்சினைக்கும் தீர்வாயிருக்கிறது.*

*மரணமாகிய அந்த விஷத்தேனீ அவரை கொட்டிய போது, அந்தக் கொடுக்கு அவரில் நங்கூரமிட்டது.*

*தேனீயானது அது ஒரு பூச்சி வகையாகும், அதற்கு ஒரு கொடுக்கு உண்டு, கொட்டும் போது ஆழமாகப் பதித்துவிட்டால் அது வெளியே கொடுக்கை இழுக்கும் போது, அக் கொடுக்கு உள்ளே தங்கிவிடும். மரணத்திற்கும் ஒரு கொடுக்கு உண்டு.*

மரணத்திற்கு எப்போதும் ஒரு கொடுக்கு உண்டு. ஒரு நாளிலே, கல்வாரியில், அது ஏறிச் சென்றபோது, அப்பாறைகளின் முகட்டிலே இரத்தமானது பாறைகளின் மேல் சிதறித் தெளித்த போது, கல்வாரி மாமலை மேல் அது தூசியைப் போய் அடைந்த போது, கொல் கொதாவுக்குப் போகையிலே, அந்த நலிந்த சரீரத்தில் அவரது முதுகில் சிலுவையானது சுமந்து கொண்டு சென்ற பொழுது, அவரது இரத்தம்படிந்த கால் தடங்கள் அவரை சாட்டையினால் அடித்து அவரை காயப் படுத்துகையில் அவர் அங்கே ஏறிச் சென்றார்.

ஆனால் அவரோ தன்னில் முற்றிலு மானதைக் கொண்டிருந்தார். அவர் தாம் எங்கே நிற்கிறோம் என்பதை அறிந்திருந்தார்.

ஏனெனில் தாவீதின் மூலம் தேவனுடைய வார்த்தையானது, “என் ஆத்துமாவை பாதா

ளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்" என்று கூறியுள் ளதை அவர் அறிந்திருந்தார்.

எழுபத்தியிரண்டு மணிநேரத்தில் அழிவா னது வந்து ஏற்பட்டுவிடும் என்று அறிந்திருந் தார். "...இந்த ஆலயத்தை இடித்துப் போடுங் கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்பு வேன்", என்றார். அவரிடம் ஒரு முற்றிலு மானது இருந்தது.

அவர் பரியாசத்தோடு துப்பப்பட்டவராய் மலையின் மேல் ஏறிச் சென்றார்.

குடித்து வெறித்திருந்த போர்ச்சேவகர்களி னால் காறி உமிழப்பட்டவராய் இருந்தார்.

அவர்கள் அவர் முகத்தின் மேல் துணியைப் போட்டு மூடினார்கள். முகத்தில் குத்தினார்

கள்; தலையில் அடித்தார்கள். ‘‘நீர் தான் தீர்க்கதரிசியாயிற்றே, உம்மை குத்தியது யார் என்று சொல்லும்’’ என்றார்கள்.

அந்த மலையின் மேல் அவமானத்தோடும், நிந்தையோடும் ஏறிச் சென்றார்.

அவரைவிட்டு அவரது ஆடைகள் உறிந்து போடப்பட்டன.

அவமானத்தை அவர் எண்ணாமல் ஜனங் களின் முன்னால் அந்தக் கோலத்தில் சிலுவை யின் மேல் நிர்வாணமாய் தொங்கிக் கொண் டிருந்தார்.

அந்தக் கேடடைந்தவராய், எந்தத் தவறும் செய்யாத நிலையில் ரோம அரசின் மிகக் கொடூரமான தண்டனையை பெற்றவராய் அவர் மரித்துக் கொண்டிருந்தார்.

***131.*** *மகதலேனா மரியாளைப் பற்றி ஒரு சிறு கதை வழங்குகிறது. அவள் ஓடிப் போய், "அவர் என்ன பிழை செய்தார்? உங்கள் பிணியாளிகளை சொஸ்தமாக்கினார், மரித்தோரை உயிரோடு எழுப்பினார், சிறைப்பட்டவர்களை விடுதலையாக்கினார். அவர் என்ன பிழை செய்தார்?" என்றாளாம்.*

*அப்போது ஒரு ஆசாரியன் அவள் வாயில் பளீரென அடித்தானாம். அதினால் வாயிலிருந்து இரத்தம் ஓடி வந்தது. அப்பொழுது அவ்வாசாரியன் ''நீங்கள் இவளுக்கு செவி கொடுப்பீர்களா? அல்லது உங்களது பிரதான ஆசாரியன் கூறுவதைக் கேட்பீர்களா?" என்று கேட்டானாம். ஓ, அது மத ஸ்தாபன உலகாயுள்ளது. எல்லாவற்றையும் விட அது சாபம் நிறைந்ததாயிருந்தது. அது அவ்வாறே உள்ளது.*

# அவ்வாறே இயேசுவும் அவருடைய சகோதரரில் ஒருவனான யூதாஸ்காரியோத்தால் முப்பது வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-07-28 கிறிஸ்து தேவனுடைய பரமரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார்

194. அவர் யோசேப்பில் தம்மை வெளிப்படுத்தினார். அவனுடைய சகோ தரராகிய ஸ்தாபனத்தின் நடுவில் அவன் பிறந்தான். அவன் ஆவிக்குரியவனா யிருந்தபடியால், அவனுடைய சகோதரர் முகாந்தரமின்றி அவனைப் பகைத்தனர். அவன் தரிசனங்களைக் கண்டான்; தேவன் அவனோடு கூட இருந்தார். அவனால் சொப்பனங்களுக்கு அர்த்தம் கூறமுடிந்தது. அவனுடைய சகோதரர் அவனைப் பகைத் தனர். அவனுடைய சகோதரரால் அவன் ஏறக்குறைய முப்பது வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டான். அவ்வாறே இயேசுவும்

அவருடைய சகோதரரில் ஒருவனான யூதாஸ்காரியோத்தால் முப்பது வெள்ளிக் காசுக்கு விற்கப்பட்டார். அவன் குழியில் போடப்பட்டு, மரித்து போனதாக எண் ணப்பட்டான். அது உண்மை. அவனுடைய தந்தைக்கும் மற்றவர்க்கும் அவன் மரித்துப் போய்விட்டதாக அறிவிக்கப்பட்டது. அவன் குழியிலிருந்து வெளியே எடுக்கப் பட்டு, பார்வோனின் வலது கரத்தை யடைந்தான்.

195. அந்த இருண்ட சிறையில் அவன் எவ்வளவாக பாடுபட்டான்! ஆகவே - ஆகவே அங்கே இரட்சிக்கப்பட்ட இரண்டு பேர் இருந்தனர். அங்கு பானப்பாத்திரக் காரனும் சுயம்பாகியும் இருந்தனர் ஒருவன் இரட்சிக்கப்பட்டான், மற்றவன் கைவிடப் பட்டான், ஆமாம். ஆகவே அந்த-அந்த பானப்பாத்திரக்காரன் .... அவர்களின்

ஒருவன் கைவிடப்பட்டான், மற்றவன் இரட்சிக்கப்பட்டான். அது போன்றே, சிலுவையாகிய சிறையில் இயேசு இருந்த போது - நம்முடைய பாவங்களுக்காக, நமக்குப் பதிலாக அவர் சிலுவையில் சிறைவாசம் செய்த போது - ஒரு கள்ளன் கைவிடப்பட்டான், மற்றவன் இரட்சிக்கப் பட்டான். பாருங்கள்? அதேவிதமாக நிகழ்ந்தது?

196. அவன் ராஜாவாகிய பார்வோனின் வலது பாரிசத்துக்கு கொண்டு செல்லப்பட்டான். அவன் ராஜாவின் பாதங்களில் அமருவான் என்றும், எகிப்தின் சகல அதிகாரமும் அவனுக்கு கொடுக்கப்படுமென்றும் அவன் தரிசனம் கண்டான். அந்த தரிசனம் நிறைவேற வேண்டியதாயிருந்தது. அவன் சிறைவாசம் செய்து, அவனுடைய தாடி வளர்ந்திருந்த அந்த

நிலையில், இத்தரிசனத்தை அவன் அநேக முறை ஆராய்ந்து பார்த்தான். என்றாவது ஒரு நாளில் அது நிறைவேற வேண்டு மென்று அவன் அறிந்திருந்தான்.

197. அது தாமதமானாலும் நிறை வேறியே ஆகவேண்டும். நான் சென்ற இரவு - இல்லை, அதற்கு முந்தின இரவு; புதன் இரவு ஆராதனையில் பேசின வண்ணமாக. பாருங்கள்? அது எப்படி யாகிலும் நிறைவேற வேண்டும். தேவன் கூறினால் அது நிறைவேறியே ஆகவேண் டும். அது உறுதிப்படுத்தப்பட்ட தீர்க்கதரிசி யாயிருக்குமானால் அது நிறைவேறியே தீர வேண்டும். ஏனெனில் அது தேவனுடைய வார்த்தை.

# நீ அதை விசுவாசிக்க மாத்திரம் வேண்டும்



நீ ஒரு கிறிஸ்தவன். இயேசு உனக்காக மரித்து சம்பாதித்த இரட்சிப்பின் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் உனக்கு உரிமை உண்டு. அவைகளெல்லாம் உன்னுடையதே! அதற்காக எல்லாம் செலுத்தப்பட்டு விட்டது. நீ அதை விசுவாசிக்க மாத்திரம் வேண்டும். அது கற்பனையல்ல; ஆனால் அதை விசுவாசி. மேலும் அது உன்னுடையதென்று உனக்குத் தெரியும். மேலும் நீ அதை உன்னுடைய சொந்தமாக்கிக் கொள்கிறாய். ஓ! அதுவே வெற்றி சிறக்கப் பண்ணுகிற விசுவாசம்; தெரிந்து கொள்!

சகோ. பிரன்ஹாம்

செய்தி: பரிபூரண விசுவாசம், பத்தி எண் 146

# கல்வாரியில்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து